No. of Printed Pages : 6

4750878

6651

பதிவு எண் | | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : **3** மணி ]　　　　　　　　　　　　[ மதிப்பெண்கள் : **100**

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI** -க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்க்னுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

**1.** புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?

**2.** மறவற்க எனவும் துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடு-கிறார் ?

**3.** வளன் செனித்த படலம் உரைப்பது யாது ?

**4.** 'அந்தாதி' - விளக்குக.

**5.** மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப் பெறுகின்றன ?

**6.** சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்றழைக்கப்படக் காரணம் யாது ?

[ திருப்புக

**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

**7.** இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

**8.** நற்றாய் காக்கைக்குப் பராய்க் கடன் உரைத்தவாற்றைப் புலப்படுத்துக.

**9.** பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

**10.** கம்பராமாயணம் - குறிப்பு வரைக.

**11.** ‘கடமை புரிந்தான் இவனே’ - இடஞ்சுட்டுக.

**III.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

**12.** தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

**13.** தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற் பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

**14.** சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

**15.** உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?

**16.** குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

**IV.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. **1x8=8**

**17.** அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் தெரிவிக்கப் பெற்றுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**18.** கண்ணகியின் சூளுரையும் நகர்மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

**19.** குழந்தைத் தொழிலாளர் அவலநிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

**20.** ‘புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி’

(அ) இவ்வடி அமைந்துள்ள செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ஆ) இவ்வடி அமைந்துள்ள செய்யுளைப் பாடியவர் யார் ?

(இ) இது யார் யாரிடம் கூறியது ?

(ஈ) ‘புரவி’ என்னும் சொல்லின் பொருள் யாது ?

**அல்லது**

**21.** ‘தோர்த்த பாங்கினர் தொழும்பர் என்று ஆகுவர்’

(அ) இவ்வடி அமைந்துள்ள செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ஆ) மேற்கண்ட செய்யுளடியின் ஆசிரியர் யார் ?

(இ) இது யார் கூற்று ?

(ஈ) ‘தொழும்பர்’ என்னும் சொல்லின் பொருள் யாது ?

**VI. 22.** ‘கண்டனென்’ எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடி பிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. **4+2=6**

**23.** ‘எழுமை’ எனத் தொடங்கும் செய்ந்நன்றியறிதல் அதிகாரத் திருக்குறளையும் ‘நோய்’ என முடியும் அறிவுடைமை அதிகாரத் திருக்குறளையும் அடி பிறழாமல் எழுதுக. **2+2=4**

**VII. 24.** **எவையேனும் இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. **2x2=4**

(அ) வாழ்த்துவம் (ஆ) செய்க

(இ) ஈன்ற (ஈ) காணீர்

(உ) ஆடுகின்ற (ஊ) வேண்டேன்

**25.** **எவையேனும் மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்புத் தருக. **3x2=6**

(அ) வாழிய வாழிய (ஆ) மலர்தல்

(இ) தடந்தோள் (ஈ) அவியா

(உ) பசிக்கயிறு (ஊ) கடும்பகை

[ திருப்புக

26. **எவையேனும் இரண்டு** தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. **2x2=4**

(அ) பகலுறை (ஆ) பெருந்தேர்

(இ) பூங்கொடியாள் (ஈ) பெண்ணரசு

(உ) சொற்பதம் (ஊ) மணிக்கழுத்து

27. சான்று தந்து விளக்குக. **1x4=4**

பொதுவியல் திணை

**அல்லது**

புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது - துறை.

28. உதவி வரைத்தன் றுதவி உதவி **1x4=4**

செயப்பட்டார் சால்பின் வரைத்து

– இக்குறளில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

உவமை அணி – சான்று தந்து விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்றவணி – சான்று தந்து விளக்குக.

**VIII.** பொருத்துக. **4x1=4**

29. சுவடி - சிக்கனம்

30. வெய்யோன் - உள்ளம்

31. செட்டு - கதிரவன்

32. சிந்தை - அறியாமை

- நூல்

**IX.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து வினா குறியீட்டு எண்ணுடன் விடையையும் சேர்த்து எழுதுக. **16x1=16**

**33.** தமிழரசிகுறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் :

(அ) சிவன் (ஆ) திருமால் (இ) முருகன்

**34.** தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் :

(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு (இ) புறநானூறு

**35.** 'நெடுந்தொகை' என்றும் வழங்கப்படும் நூல் :

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு (இ) பரிபாடல்

**36.** 'பெருநாவலர்' என்னும் பெயரால் பாராட்டப்படும் புலவர் யார் ?

(அ) திருவள்ளுவர் (ஆ) கபிலர் (இ) அம்மூவனார்

**37.** சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு :

(அ) படலம் (ஆ) இயல் (இ) காதை

**38.** 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக' என்று வேண்டிக் கொண்டவர் யார் ?

(அ) இளங்கோவடிகள் (ஆ) சீத்தலைச் சாத்தனார் (இ) ஒட்டக்கூத்தர்

**39.** தாம் இயற்றிய இராம காதைக்குக் கம்பர் இட்ட பெயர் :

(அ) வழிநூல் (ஆ) ஆதிகாவியம் (இ) இராமாவதாரம்

**40.** 'கொன்ஸ்டான்' என்னும் சொல்லுக்குப் பொருள் :

(அ) கொன்றவன் (ஆ) அஞ்சாதவன் (இ) வேற்று நாட்டவன்

**41.** 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' – என்னும் பாடலின் ஆசிரியர்.

(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார் (இ) வாணிதாசன்

[ திருப்புக

42. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர் :

(அ) கம்பர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) இளங்கோவடிகள்

43. பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் சிறப்புப் பெயர் யாது ?

(அ) புரட்சிக்கவி (ஆ) ஆதிகவி (இ) திவ்விய கவி

44. ‘முச்சங்கம் வளர் கூடலிற் சென்று புகலீர்’ - ‘கூடல்’ எனக் குறிக்கப்படுவது யாது ?

(அ) மதுரை (ஆ) காஞ்சி (இ) பூம்புகார்

45. ‘‘நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்’’ - என்று பாடியவர் :

(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) பாரதியார்

46. ‘தமிழ் - பிரஞ்சு கையகர முதலி’ என்ற நூலை வெளியிட்டவர் :

(அ) வாணிதாசன் (ஆ) கம்பதாசன் (இ) சுப்புரத்தினதாசன்

47. உவமைக் கவிஞர் சுரதா எழுதிய நூல்களுள் ஒன்று :

(அ) சுட்டுவிரல் (ஆ) தேன்மழை (இ) எழிலோவியம்

48. ‘சின்னச் சீறா’ என்னும் நூலை எழுதியவர் :

(அ) உமறுப்புலவர்

(ஆ) குணங்குடி மஸ்தான்

(இ) பனுஅகுமது மரைக்காயர்

**X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** **2+2=4**

49. தினைத்துணை __________ செயினும் பனைத்துணையாக்

__________ பயன்தெரி வார்.

50. அஞ்சுவ தஞ்சாமை __________ அஞ்சுவ

தஞ்சல் அறிவார் __________.

-oOo-